# நாம் முயன்றால் ஊழலை வெல்லலாம் தூய்மையான பாரதத்தை உருவாக்கலாம்,

பேரா.ச. முத்துக்குமரன்

ஊழல் என்ற சொல் ஊழ்+அல் என்று பிரிக்கப்படும். ஊழ் என்பது விதி. அது இயற்கை விதியாகவும் இருக்கலாம். மனிதனால் இயற்றப்பட்டதாகவும் இருக்கலாம். அல் என்றால் அல்லாதது. புறம்பானது என்று பொருள். ஊழல் என்பது விதிகளுக்குப் புறம்பானது என்று அறிகிறோம். விதிக்கு மாறானது ஒரு நிறுவனத்தில் பரவலாக நடைபெறுகிறது என்றால் அந் நிறுவனம் அழுகிப் போய்விட்டது என்றாகும். அதாவது நிறுவனம் அழியும் நிலையை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது. ஒரு நிறுவனத்திலோ ஒரு நாட்டிலோ ஊழல் மலிந்து விட்டது என்றால் அந்நிறுவனம் அந்நாடு மெல்ல மெல்ல அழிந்து வருகிறது என்பது பெறப்படும்.

இன்று நம் நாட்டில் ஊழல் மலிந்து விட்டது என்று பெரும்பாலோர் கூறுகிறார்கள். அவர்களே ஊழல் உலகு எங்கும் வியாபித்துள்ளது. எல்லா நாடுகளிலும் உள்ளது போலவே நம் நாட்டிலும் இருக்கிறது. அதை ஒழிக்க முடியாது. அதோடு நாம் வாழ வேண்டியதுதான். ஊழல் மூலம் நாம் நமக்கு வேண்டியதைச் சாதித்து கொள்ள வேண்டியதுதான். அகப்பட்டால் தானே திருடன் என்பதால், நமக்கு வாய்ப்பு கிடைத்தால் நாமும் அகப்படாமல் ஊழலில் ஈடுபட்டு பொருள் சேர்ப்பதுதான் புத்திசாலித்தனம் என்று நினைக்கின்றனர். இவ்வாறு பேசுகின்றவர்களும் நினைக்கின்றவர்களும் பின் வருவனவற்றைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

ஊழல் என்பது புற்று நோய் போன்றது. புற்று நோய் வந்த பின் மற்ற நல்ல சதை தசைகளை வளரவிடாது, புற்று நோய் தாக்கப்பட்ட சதை, தசை மட்டுமே எப்படி வளருமோ அப்படி ஊழல் புகுந்த நிறுவனத்திலும் நாட்டிலும் ஊழல் புரிபவர்கள் எண்ணிக்கையும் ஊழலின் பரிமாணமும் பெருகும். நல்லோர் எண்ணிக்கை குறையும். ஒரு நிலையில் ஊழலின் பரிமாணம் தாங்க முடியாததாகி ஊழல் மலிந்த நிறுவனம், சமுதாயம், நாடு அழிந்து போகும்.

கீழ்மக்கள் தவறு செய்யாமல் இருப்பின் அதற்குக் காரணம் அகப்பட்டுக் கொள்வோமோ? தண்டனை கிடைக்குமோ என்ற அச்சம் தான். அச்சமே கீழ்களது ஆசாரம் என்பார் வள்ளுவர் (குறள் 1075 வரி 1) இதற்கெதிராக மேலார் ஒழுக்கமே அனைவருக்கும் மேன்மை தரும் என்பதால் ஒழுக்கத்தை கடைப்பிடிப்பர்.

நமது நாட்டில் எப்போதும் இப்போது போல ஊழல் மலிந்திருந்தது என்று சிலர் கூறுவது உண்மையல்ல. முன்பு ஊழல் தலைகாட்டினால் ஊழல் செய்தவர் தண்டிக்கப்பட்டார். அவர் பணியாற்றிய நிறுவனத்தில் நேர்மையானவர் பதவியை ஏற்றார். மறுபடியும் நிறுவனம் நேர்மையைக் கடைப்பிடித்தது. அந்த நிலையே நாம் வேண்டத்தக்கது.

நான் தமிழ்நாடு பொதுப்பணித் துறையில் உதவிப் பொறியாளராக பணியாற்றிய காலத்தில், (1956ல்) சென்னையில் அரசு கட்டிட பராமரிப்பு கோட்டத்தில் நியமிக்கப்பட்டேன். அப்போது பதவியில் இருந்த செயற்பொறியாளர் மிகவும் நேர்மையானவர். அவருக்கு முன் இருந்தவர் ஊழலில் திளைத்தவர். ஊழல் செயற்பொறியாளர் காலத்தில் முதலில் தரம் தாழ்ந்த பணி செய்யப்பட்டு பணம் பெறும் நிலை இருந்தது. பின்னர் சிறிது சிறிதாக பணிகள் செய்யாமலேயே பணி செய்ததாக அளவுகள் எழுதப்பட்டு பணமும் கொடுக்கப்பட்ட நிலையை அடைந்தது.

அப்போது ஒரு பணியைச் செய்ய 100 சதுர அடிக்கு ஒரு ரூபாய் ஆகும் என்றால் ஒப்பந்தக்காரர்கள் ஓர் அணா போதும் என்று ஒப்பந்தப்புள்ளி அளித்து ஒப்பந்தப் பணியை, ஏற்று பணி செய்யாமலேயே பணம் பெற்றார்கள். அதில் ஒரு பகுதி பொறியாளர்களுக்குச் சென்றது. ஆனால் புதியவர் வந்த பின்னர் அவ்வாறு பணியைச் செய்ய மிகக் குறைந்த கட்டணம் கேட்டவர்களுக்கு அவ்வளவு குறைந்த கட்டணத்தில் இப்பணியைத் தரமாக செய்ய முடியாது என்று ஆணையிட்டு அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்கவில்லை. மாறாக அரசு நிர்ணயித்த விலையிலேயே நல்ல ஒப்பந்தக் காரரைத் தேர்ந்து எடுத்து நியமித்து தரமான பணி செய்யச் செய்தார். அன்று அந்த தூய செயற்பொறியாளர் எவ்வாறு தனது கோட்டத்தைத் தூய்மைப்படுத்தி ஊழலை ஒழித்து தரமான பணிகள் நடக்கச் செய்தாரோ அதே போல நமது நாட்டிலும் நாம் செய்ய முடியும். நம் சமுதாயம் வாழ நாம் செய்தே ஆக வேண்டும்.

## முயன்றால் விரும்பியதை அடையலாம்

நமக்கு ஒரு பிரச்சனையைத் தீர்க்க வேண்டியுள்ளது, அதற்கு உதவி தேடுகிறோம், கிடைக்கவில்லை. உதவி வரும் என்று ஓர் அளவுக்கு மேல் காத்து இருப்பதில் பயனில்லை. சோர்வு இல்லாது முயல வேண்டும். பிரச்சனையைத் தீர்க்க எவ்வாறு செயலில் இறங்க வேண்டும் என்று சிந்திப்போம். செயலில் இறங்கினால் வெற்றி நிச்சயம் என்கிறது பழமொழி நானூறு. ( பாடல் 153 )

இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வு கொள்ளாது முயன்றால் பெருமை நம்மை வந்து அடையும் என்றார் வள்ளுவர் (குறள் 611) மேலும், அவர் அறிய வேண்டியதை அறிந்து முயலாதிருப்பதே பழி என்கிறார் ( 618).

நமக்கு பழி வராதிருக்க நாம் ஏற்ற முறையை அறிந்து செயலில் இறங்கி வெற்றி காண்போமாக. நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் காண்போம்.

## பதவி

பதவியுடன் வருவது பொறுப்பு. அந்த பொறுப்பை நிறைவேற்ற தேவையான அதிகாரம். இன்று பதவியைத் தேடுவதே அதிகாரத்திற்கு என்று பலரும் கருதுகின்றனர். இன்று தேர்தலில் வென்றார்; பதவியைக் கைப்பற்றினார்; அதிகாரம் பெற்றார் என்கிறார்கள். ஆனால் நமது இலக்கியங்கள் பதவி என்றால் அதற்கு என்று கடமைகள் உண்டு. அவற்றை நிறைவேற்ற முடியவில்லை என்றால் தானாகவே முன் வந்து பதவி விலக வேண்டும் என்று அறிவுறுத்துகின்றன. தசரதர், அமைச்சர்கள், பெரியோர்களை அழைத்து உங்களின் உதவியால் இதுவரை இந்த நாட்டை அரசாண்டேன். எனக்கு இப்போது வயது முதிர்ந்ததால் இனி என்னால் அரசு கடமைகளை ஆற்ற இயலாது. ஆகவே இராமனுக்கு முடிசூட்ட விரும்புகிறேன் என்று கூறி அவர்கள் ஆலோசனைகளையும் கேட்டு முடிவு எடுக்கிறார். அதே போல பிற்காலத்தில் வந்த பல நூல்களிலும் கடமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

முன்பு மன்னராட்சியில் மன்னர் மக்களை நல்வழிப்படுத்துவார் என்று சொல்லப்பட்டது. புறநானூறு, நன்னடை நல்கல் வேந்தர்க்கு கடனே ( பாடல் 312 வரி 4) என்றது. ஆனால் இன்று மக்களே ஆட்சி செய்பவரைத் தேர்ந்து எடுக்கிறார்கள். ஆகவே, மக்கள் தாம் நன்னடை நல்குவது உனது கடமை என்று ஆட்சியில் அமர்ந்தோருக்கு அறிவுறுத்த வேண்டியுள்ளது. இன்று ஆட்சிக்கு வந்துள்ள, வர முயல்பவர்கள் யாவரையும், மக்களாகிய நாம் அந்தப் பதவிக்கு பல கடமைகள் உண்டு. அவை யாவையும் உங்களுக்குத் தெரியுமா? அக்கடமைகளை ஆற்ற தேவைப்படும் திறமைகளை நீங்கள் வளர்த்துக் கொண்டீர்களா? என்று கேட்க வேண்டும்.

அவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள நாம் ஊக்கப்படுத்த வேண்டும். உதவ வேண்டும். இக் கருத்தை அனைத்து மக்களும் உணரச்செய்யவேண்டும்.

மேலும் நாம் தேர்ந்து எடுத்து ஆட்சிக்கு அனுப்பியவர் செம்மையாகச் செயல்படவில்லை; நாம் அறிவுறுத்தியும் அவர் தன் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவில்லை என்றால் அவர் தொடர்ந்து ஆட்சி செய்யாமல் விலகச் செய்வதும் நமது கடமை. ஒருவரது ஆட்சியை நாம் ஏற்றுக் கொள்ளும் வரைதான் அவர் ஆட்சி செய்ய முடியும். நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அவரால் பதவியில் தொடர முடியாது. மகாத்மா காந்தி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் சூரியன் அஸ்தமிக்காத உலகத்தின் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை ஆண்ட ஆங்கிலேயர்களை நம் நாட்டை விட்டு வெளியேற்றினார். அதே போல நாம் நினைத்தால் ஊழல் செய்பவர்கள் தொடர்ந்து ஆட்சி செய்ய முடியாமல் ஓடச் செய்ய முடியும்.

அதாவது ஊழல் பேர்வழிகளைத் தேர்ந்து எடுக்கக் கூடாது. தவறுதலாக ஊழல் பேர்வழிகளைத் தேர்ந்து எடுத்துவிட்டால் அவர்கள் பதவியில் தொடர முடியாது விலகச் செய்ய வேண்டும்.

**நாம் என்ன எதிர்பார்க்க வேண்டும்?**

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள விழைபவர், ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர் ஆகியோரிடம் நாம் என்ன எதிர்பார்க்க வேண்டும்?

1. தகுதி
2. நற்பண்புகள்
3. பொறுப்புகளை நிறைவேற்றும் செயல் திறமை

**தகுதி**

ஒவ்வொரு பதவிக்கும் சில தகுதிகள் வேண்டும். தேவைப்படும் தகுதிகள் இல்லாது தவறான அடிப்படையில் தவறான வழிகளில் பதவியில் அமர்வது அனைவருக்கும் துன்பம் தரும். பதவிக்குத் தேவைப்படும் அறிவைப் பெறாதவரை அன்பின் காரணமாக நம்பி பதவியை அளித்தால் பதவியில் அமர்பவருக்கும் துன்பம், அமர்த்தியவருக்கும் துன்பம் என்றார் வள்ளுவர்(குற ள் 507).

தகுதியில்லாதவரை அவர் மேல் நாம் கொண்ட அன்பால் தேர்ந்து எடுத்து பதவியில் அமர்த்தினால் நமக்கு துன்பம் தான் மிஞ்சும். ஆகவே, பதவியை நாடுபவர் பதவி என்பது பொறுப்பு, அதிகாரம் அல்ல என்பதை உணர்ந்து அப்பொறுப்புகளைச் சுமந்து கொள்ளும் திறன்களைத் தம்முள் வளர்த்துக் கொண்டு பின்னரே பதவியைத் தேட வேண்டும்.

### நற்பண்புகள்

நற்பண்புகள் கொண்ட நல்லோர் வாழும் நாடுதான் நல்ல நாடு என்றார் ஔவையார் (புறநானூறு 187). நம் சமுதாயமும் நம் நாடும் வாழவும் வளரவும் மக்கள் அனைவரும் நற்பண்பு, நன்னடத்தை, நற்குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆட்சி பொறுப்பில் அமர்வோர் இவற்றை சிறப்பாக வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றில் முதன்மையானது அறம் செய்ய விரும்ப வேண்டும். (ஆத்திச்சூடி 1) அறம் செய விரும்பினால் அறவழியில் வாழ்வோம். அடுத்ததாக எளிய வாழ்க்கை வாழ வேண்டும். நமது தேவைகளைச் சுருக்கிக் கொள்ள வேண்டும். தேவைக்கு மேல் பெரிய வீடாகக் கட்டக் கூடாது (ஆத்திச்சூடி 3). ஆடம்பரமாக வாழக் கூடாது. மற்றவர் பொறாமைப்படும்படி வாழக் கூடாது. முடிந்த அளவு உழைக்க வேண்டும். பொருளைச் சேர்க்க வேண்டும் (குறள் 759) நமக்கு வர வேண்டியதைத்தான் பெற வேண்டுமேயன்றி இலஞ்சம் வாங்குவது போன்ற தீயவழிகளில் பொருள் ஈட்டலாகாது. அதாவது நல்வழியில் பொருள் சேர்க்க வேண்டும் (குறள்754) சேர்த்த பொருளை பல்லோருடனும் பகுத்து உண்டு வாழ வேண்டும் (குறள் 322). மேலும், நீதியையும், நன்மையையும் விரும்பி பிறர்க்குப் பயன்படும்படி வாழ வேண்டும் (குறள் 974)

### ஆட்சியாளர் பண்புகளும் திறன்களும்

ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தவர் அருள் நிறைந்தவராகவும், அஞ்சாத நெஞ்சினராகவும், அறிவுள்ளவராகவும், ஊக்கமுடையவராகவும் (குறள் அதிகாரம் 39) விளங்க வேண்டும். மேலும் அவர் குற்றம் செய்யாமல் இருப்பதை நோக்கமாகக் கொண்டு, எந்த தீங்கும் வரும் முன்னர் காத்துக் கொள்ளும் திறமை பெற்றிருக்க வேண்டும்.

நமக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்காது மூத்த அறிவுடையோரைக் கலந்து ஆலோசித்து முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டும்.(குறள் 445) அதற்காககத்தான் மேலவை உருவாக்கப்பட்டது. அதில் கட்சி சாராத பல்வேறு துறை வல்லுநர்களை

சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் ஆலோசனைகளைத் தேவைக் கேற்ப கேட்டு செயலாற்ற வேண்டும்.

புகழ் தருபவற்றைச் செய்யவேண்டும். விளம்பரம் தேடலாகாது. பெருவாரியான மக்களுக்கு நன்மை தரும் செயல்களைச் செய்து புகழ் சேர்க்க வேண்டும்.

இலவசங்கள் அளிப்பது மக்கள் நலத் திட்டம் என்று சொல்ல இயலாது.

*இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டில் பரந்து*
*கெடுக உலகு இயற்றியான (குறள் 1062)*

என்றார் வள்ளுவர். இப்பரந்த உலகில் மற்றவரிடம் கையேந்தித்தான் உயிர் வாழ வேண்டும் என்ற நிலையில் சிலர் இருக்கத்தான் வேண்டும் என்றால் இவ்வுலகை படைத்தவன் கெடுவானாக. நம் மக்கள் உலகைப் படைத்தவன் இறைவன். ஆட்சி செய்பவர் கண் கண்ட இறைவன் என்று நம்புகின்றனர். ஆகவே இலவசத்தை எதிர்நோக்கும் மக்கள் சிலர் ஒரு நாட்டில் இருக்கின்றனர் என்றால் அது கண்கண்ட தெய்வமான ஆட்சி செய்பவருக்கு இழுக்கு. எனினும், இயற்கைச் சீற்றங்களாலோ மற்ற காரணங்களாலோ தளர்ந்த குடிமக்களுக்கு அவர்களைக் கேட்காமலேயே உதவ வேண்டும். *(குறள் 390)*

மக்கள் அச்சமின்றி வாழ வகை செய்ய வேண்டும். அரசு, அரசு சார்ந்தோர், திருடர், பகை நாட்டினர், மற்ற எவ்வுயிரினாலும் துன்பம் நேராது தவிர்ப்பது, ஆட்சியாளர் கடமை. மேலும் இன்றையச் சூழலில் மக்கள் நல அரசு மக்கள் அனைவருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், தரமான கல்வியும் தேவையான உடல்நல வசதிகளும் கிடைக்கச் செய்ய வேண்டும். அதாவது அவற்றைப் பெற்றுக் கொள்ளத் தேவைப்படும் அளவுக்கு அவர்களின் இயற்கையான திறமைகளை மேம்படுத்த வேண்டும்.

மேலும் மக்கள் நல்வாழ்வு வாழவும், நாட்டின் பாதுகாப்புக்கும் தேவைப்படும் அனைத்தையும் செய்ய வேண்டிய முறையில் செய்ய வேண்டிய நேரத்தில் சிறப்பாக செய்யும் திறமைகளை உடையவராகவும் விளங்க வேண்டும்.

**என்ன செய்ய வேண்டும்?**

மக்களாட்சி நிலவும் நாட்டில் எந்த ஒருவரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பைப் பெறலாம்; ஏற்கலாம். ஆகவே தேவைப்படும் தகுதிகள் நற்பண்புகள் திறன்களை அனைத்துக் குழந்தைகளும் பெறும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அதாவது அனைவருக்கும் கல்வி வசதிகள் செய்யப்பட வேண்டும். தரமான கல்வி பெற்ற மக்கள் வாழும் நாட்டில் நல்லரசு (வல்லரசு அல்ல) நிலவும். மக்கள் அனைவரும் மகிழ்ச்சி நிறைந்த நல் வாழ்வு வாழ்வர். அங்கு சாந்தி நிலவும்.

**முடிவுரை**

நம் கண் எதிரே தவறு நடப்பதை நாம் காண்கிறோம்.தவறு என்பதை உணர்கிறோம். நாம் என்ன செய்ய வேண்டும் என்றும் நமக்குத் தெரிகிறது. ஆனால் செயலில் இறங்கத் தயங்குகிறோம். வரலாற்றைப் பார்த்தால் சமுதாயங்கள் அழிந்ததற்கு அச்சமுதாயத்தின் ஒரு சில தீயவர்கள் காரணமல்ல. பல நல்லவர்கள் தீமையைக் கண்டும் வாளாயிருந்ததே. ஆகவே, யாராவது ஒரு நல்லவர் முதல் கல்லை எடுத்து எறிய வேண்டும். அதன் பின்னர் பலரும் செயலில் இறங்குவார்கள். அந்த முதல் கல்லை எறிபவர் ஏன் நாமாக இருக்கக் கூடாது?

ஊழல் மலிந்தால் நம் உழைப்பு நமக்கு பலன் தராது. விழலுக்கு இறைத்த நீர் போல கயவர்களுக்கு போய்ச் சேரும். அவர்கள் கயமைத்தன்மை உடையவர்கள் என்பதால், அதை அவர்கள் நலம் தருபவைகளுக்கு பயன்படுத்த மாட்டார்கள். தீயவற்றுக்கே பயன்படுத்துவார்கள். அந்த தீமை நம்மையே வந்தடையும். ஆகவே விழலுக்கு நீர் பாய்ச்ச மாட்டோம் என்று சபதம் ஏற்போம். ஊழலை ஒழிப்போம். திறமைகளை மேம்படுத்துவோம். இலவசங்களை எதிர்நோக்கும் மனநிலையை மாற்றி தம் காலில் நின்று தன்னம்பிக்கையுடனும் சுயமரியாதையுடனும் வாழும் சமுதாயத்தை உருவாக்கும் திறமையுடையவரே ஆட்சி செசய்யத் தகுதி உள்ளவர் என்பதை மக்களுக்கு உணர்த்துவோம். அத்தகையோர் ஆட்சியில் அமர உழைப்போம். உழைப்பால்தான் நாடு முன்னேறும் என்பதை அனைவருக்கும் உணர்த்துவோம். உழைப்பால் நாமும் முன்னேறி சமுதாயத்தையும் நாட்டையும் முன்னேற்றுவோம்.

நமது இன்றைய பாரத பிரதமர் வேண்டுகோளின்படி சுற்றுச் சூழலைத் தூய்மைப்படுத்துவோம் . மக்கள் அகத்தையும் தூய்மைப்படுத்துவோம். புறமும் அகமும் தூய்மையான ஒரு பாரதத்தை உருவாக்குவோம்.